ஓம் சக்தி

# டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையின் ஜெயந்தி விழா விஞ்ஞாபனம் 2017







**பூத்தவளே, புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்**
**காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு**
**மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே**
**மாத்தவளே உன்னை அன்றி மற்று ஒரு தெய்வம் வந்திப்பதே?**

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் வைகாசித்திங்கள் 11–ஆம் நாள் (24.1.2017) செவ்வாய்க்கிழமை வாக்கருளிக் காத்தருளும் ஸ்ரீ அபிராமி உபாசகித் தாயாரின் ஜெயந்தி விழா விஞ்ஞாபனம், மங்களம் அருளும் டென்மாரக் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் இடம்பெற, ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி அன்னையாரின் ஆசிகளும் கை கூடியுள்ளன. இப்புனித மங்களகரமான நன்னாளிலே ஸ்ரீ அபிராமி அன்னையாரின் கொலு மண்டபத்திலே ஸ்ரீ அபிராமி அன்னையாருக்கு பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று மங்கள வாத்தியங்கள் புடைசூழ, பஜனைப்பாடல்கள், முழங்க பக்தர்கள் பூமழை தூவ, கவின் நிறை சித்திரத்தேரிலே ஸ்ரீ அபிராமி அன்னை பவனி வரும் அருட் காட்சியும் இடம்பெறும்.

நிறைவாக ஸ்ரீ அபிராமி அன்னையாரின் திருவருளும் ஆசிகளும் கலந்த விபூதி பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்படும்.

**மங்களம் பொழியும் மகா சக்தி ஸ்ரீ அபிராமி உபாசகி தாயாரின் திருவடிகள் போற்றி**
**அருளாசிகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**

**ஆலயத் தொடர்புக்கு :**

**TEL: 0045 97180192**

**www.abiramiamman.dk**